**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**18.02.2026 STC.No. 891/2022 PW1. ரகுநாத்**

கடந்த 05.02.2025ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு இன்று சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 18.02.2026.**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் நான் நில போக்கர் ஆகவும், மணப்பெண் மற்றும் மணமகன் பார்க்கும் வேலைகளும் செய்து வந்தேன் தற்சமயம் நான் எந்த வேலையும் செய்யவில்லை. நான் எந்த ஆண்டு மேற்படி வேலைகளை நிறுத்தினேன் என்றால் 2022 மற்றும் 2023 ஆண்டு முதல் நிறுத்திவிட்டேன்.

2. மேற்படி வேலைகளில் இருந்து எனக்கு மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் அது குறிப்பிட்டு செல்ல முடியாது. சில மாதம் 50000 வரை வருமானம் வரும். எனது மனைவி என்ன வேலை செய்து இருந்தார் என்றால் அங்கன் வாடியில் ஆசிரியராக பணிபுரிந்து 4 வருடங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றுவிட்டார். அவருடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் 12000 முதல் 20000 வரை இருக்கும்.

3. எனது வீட்டில் இருந்து குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீடு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 முதல் 12 கிமீ வரை இருக்கும். எனக்கு இரு மகள்கள் என்றாலும் அதில் இளைய மகள் பிரியா வின் கணவர் பாபு என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு எவ்வளவு ஆண்டுகாலம் தெரியும் என்றால் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கணவர் எனக்கு உறவினர் ஆவார். ஆனால் குற்றம் சுமத்தப்பட்ட நபரை அவர் திருமணம் முடித்து வந்ததில் இருந்து தெரியும்.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் சகோதரர்கள் அனைவரும் நல்ல வசதியான நிலையில் உள்ளார் என்றால் அவர்களில் ஒருவர் மட்டும் ஓட்டுநராக பணி செய்து வருகிறார், மற்றவர்கள் வசதியாக உள்ளனர். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகன் சிங்கப்பூரில் பணிசெய்து வருகிறார் என்றால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கூறிதான் எனக்கு தெரியும்.

5. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் இரு பிள்ளைகளுக்கும் திருமண நடைபெற்றது என்றால் சரிதான். 2018ம் வருடத்தில் மகளுக்கும் 2019ல் மகனுக்கும் திருமணம் முடிந்தது என்றால் ஆண்டு எனக்கு சரியாக தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபரும் அவரது கணவரும் சேர்ந்து மாவு மில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அது நல்ல நிலைமையில் நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6.குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்ன தேவைக்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் அவர் பிள்ளைகளின் திருமணத்திற்காக வாங்கிய கடனை அடைப்பதற்காக வாங்கினார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து பணம் கேட்டார் என்றால் 20.08.2022 ம் நான் பணம் கொடுத்த தேதிக்கு முன்னாள் கேட்டார்.

7. எனது வீட்டில் வைத்து தான் கடன் வாங்கினார் என்றால் சரிதான். எனது மகள் பிரியா விற்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் அது சரியாக தெரியாது. எனது மருமகன் பாபு குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது இரணியல் நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றத்தில் CC 62/2022 என்ற காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் முதலில் தெரியாது தற்சமயம் தெரியும்.

8. நான் கடன் கொடுத்த கால கட்டத்தில் தான் எனது மருமகனும் கடன் கொடுத்ததாக குறிப்பிட்டு வழக்கு தொடுத்துள்ளார் என்றால் அவர் கடன் கொடுத்த கால கட்டங்கள் குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கை குறித்து எனது மருமகனுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்த 5லட்ச ரூபாயில் எனது மருமகன் பாபு எனக்கு உதவி செய்தார் என்றால் இல்லை. எனது மனைவி வருமான வரி செலுத்துவாரா என்றால் அவருக்கு அந்த அளவிற்கு வருமானம் இல்லை என்பதால் வருமான வரி செலுத்தவில்லை. 2018ம் ஆண்டு முதல் 2லட்சம் ரூபாய்க்கு மேல் தொகை கொடுக்க வேண்டும் என்றால் அது வங்கியின் மூலம் கொடுக்க வேண்டும் என்பதை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

10. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கடன் கொடுத்த தேதியன்று என்னிடம் 5 லட்சம்ரூபாய் உள்ளது என்பதை நிறுபனம் செய்வதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. பாலபள்ளியை சேர்ந்த ஜாண்சன் மகன் பிரைட்சிங் யை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் எவ்வளவு தொகை கடன்

கேட்டார் என்றால் 5லட்சத்திற்கும் மேல் கேட்டார் நான் என்னிடம் 5லட்சம் ரூபாய் இருந்தால் அதை கொடுத்தேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகன் சிங்கப்பூரில் பணிபுரிந்து 5லட்சம் மாத சம்பளம் பெறுவதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் கடன் கேட்கும் சுழல் வரவில்லை என்றால் சரியல்ல.

11. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கணவர் எனக்கு நன்கு பழக்கம் என்றால் சரிதான். மேற்படி விவரம் எனது மகள் மற்றும் மருமகனுக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் பிள்ளைகளுக்கு 2018யில் திருமணம் முடிந்த நிலையில் 2022ம் வருடம் என்னிடம் கடன் வாங்கும் சுழல் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

12. இவ்வழக்கு காசோலை எந்த தேதியில் என்னிடம் கொடுத்தார் என்றால் நான் பணம் கொடுத்த தேதியில் கொடுத்தார். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுத்த விவரம் யாருக்கு தெரியும் என்றால் எனது மனைவிக்கு தெரியும். எனது மனைவியை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்வதற்கு ஆட்சேடயணை உள்ளதா என்றால் எனது மனைவி உடல் நலம் சரியில்லாமல் இருந்து வருகிறார்.

13 நான் எத்தனை மணிக்கு பணம் கொடுத்தேன் என்றால் காலை 10.00 முதல் 11.00 மணிக்குள் கொடுத்து இருப்பேன். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்த பணத்தை வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் இல்லை வீட்டில் இருந்த பணமாகும். குற்றம் சுமத்தப்பட்ட நபர் பணம் வாங்கும் பொழுது ஒரு பெண்மணியுடன் வந்தார்.

14. காசோலை கொடுத்த பிறகு நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் பணத்தை கேட்டேனா என்றால் காசோலை வங்கியில் இருந்து திருப்பட்டதற்கு பிறகு நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரை அனுகி கேட்டேன். இவ்வழக்கு விவரங்கள் எனது மருமகனுக்கு தெரியும் என்றாலும், நான் தெரியாது என்று பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கணவரிடம் இருந்து முறையற்ற வழியில் காசோலைகளை எடுத்து நானும் எனது மருமகனும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல் பாலபள்ளியை சேர்ந்த பிரைட் சிங் யிடம் ஒரு காசோலையை கொடுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது

பொய்யாக வழக்கு தாக்கல் செய்து விட்டது தற்சமயம் தெரியாது என்றாலு என்று செல்கிறேன் என்றால் சரிய்ல்ல.

16. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு என்னிடம் கடன் வாங்கும் சுழல் ஏற்படவில்லை என்றாலும் அவர் கடன் வாங்கவில்லை என்றாலும், காசோலை கொடுக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கணவரிடம் இருந்து முறையற்ற வழியில் காசோலை பெற்று வழக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram(FAC)